ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 11,745 — 1959 මැයි 20 වැනි බදාදා — 20.5.1959

11,745 ம் இலக்கம் — 1959 ம் ஆண்டு வைகாசி மாதம் 20 ந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV — உள்ளூர் ஆட்சி

## அறிவித்தல்கள்

### 1952 ம் ஆண்டின் 6 ம் இலக்க உள்ளூர் அதிகாரத் தாபனங்கள் (பிரமாண உபவிதிகள்) சட்டம்

1952 ம் ஆண்டின் 6 ம் இலக்க உள்ளூர் அதிகாரத் தாபனங்கள் (பிரமாண உபவிதிகள்) சட்டத்தின் 3 ம் பிரிவின்கீழ் யாழ்ப்பாண மாவட்டத்து உடுப்பிட்டி கிராமப் பகுதியின் கிராமச் சங்கத்தால் நிறைவேற்றப்பட்ட கீழ்க்காணும் தீர்மானம் அப்பிரிவின் தாற்பரியப்படி பிரசுரிக்கப்படுகின்றது.

**தீர்மானம்**

உள்ளூராட்சி அமைச்சரால் ஆக்கப்பட்டு, " செனேற் " சபையாலும் சனப் பிரதிநிதிகள் சபையாலும் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தால் அங்கீகரிக்கப்பட்டதென 1953 ம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 7 ந் திகதி வெளியான 10,560 ம் இலக்க " கெசெற்"றில் அறிவிக்கப்பட்ட பிரமாண உபவிதிகளின் 2 ம், 12 ம், 23 ம், 24 ம 26 ம், 29 ம், 30 ம், 32 ம், 35 ம் பாகங்களை, இத்தீர்மானம் "கெசெற்"றில் பிரசுரிக்கப்படும் திகதியிலிருந்து ஏற்றுக்கொள்ளுவதென்று உடுப்பிட்டி கிராமச் சங்கம், 1952 ம் ஆண்டின் 6 ம் இலக்க உள்ளூர் அதிகாரத் தாபனங்கள் (பிரமாண உபவிதிகள்) சட்டத்தின் 3 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின்படி இத்தால் தீர்மானிக்கின்றது.

இ. இ. தர்மரத்தினம்,
தலைவர்.

கிராமச் சங்கக் கந்தோர்,
உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை,
1959 ம் ஆண்டு பெப்ரவரி மீ 21 ந் உ.

---

## துணைவிதிகள்

### கிராம சமுதாயச் சட்டம்

கிராம சமுதாயச் சட்டத்தின் (அத்தியாயம் 198) 49 ம் பிரிவின்படி யாழ்ப்பாணம் மாவட்டத்து வட்டுக்கோட்டை கிராமப் பகுதியின் கிராமச் சங்கம் உண்டாக்கியதும், 1947 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 24 ந் திகதி வெளியான 9,773 ம் இலக்க விசேஷ அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பிரகடனத்தால் திருத்தப்பட்ட அப்பிரிவின் (3) ம் உட்பிரிவு தம்மீது வைத்த தத்துவங்களின் பலத்தைக்கொண்டு உள்ளூராட்சி, கலாசார விவகார அமைச்சர் அங்கீகரித்ததுமான உபவிதிகள்.

வீ. சீ. ஜயசூரிய,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி, கலாசார விவகார அமைச்சு.

கொழும்பு,
1959 ம் ஆண்டு மேமீ 5 ந் உ.

**உபவிதிகள்**

1. யாழ்ப்பாணம் மாவட்டத்திலுள்ள சில கிராமப் பகுதிகளின் கிராமச் சங்கங்களால் உண்டாக்கப்பட்டு, 1941 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 26 ந் திகதி வெளியர்ன 8,796 ம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு, 1946 ம் ஆண்டு மே மாதம் 31 ந் திகதி வெளியான 9,562 ம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட உபவிதியால் திருத்தப்பட்ட உபவிதிகள், வட்டுக்கோட்டை கிராமப் பகுதி சம்பந்தப்பட்டவரை அவற்றின் அட்டவணைக்குப் பதிலாக கீழ்க்காணும் புதிய அட்டவணையை வைத்து இத்தால் மேலும் திருத்தப்படுகின்றன :—

" அட்டவணை

(அ) மலமகற்றுதற்கான கட்டணம் :—

| | | ரூ. | ச. |
|---|---|---|---|
| (1) முதலாவது வாளிக்கு மாதமொன்றுக்கு | | 3 | 00 |
| (2) மேலதிகமான வாளி ஒவ்வொன்றுக்கும் மாதமொன்றுக்கு | .. | 1 | 50 |

(ஆ) குப்பைகூட்டுதற்கான கட்டணம் :—

| | | | |
|---|---|---|---|
| மாதமொன்றுக்கு | .. | 0 | 50 " |

**தீங்கான, அபாயமான வியாபாரங்கள்**

2. (1) கீழ்க்காணும் வியாபாரங்கள் தீங்கான வியாபாரங்களாகக் கருதப்படும் :—

(அ) பாடம்பண்ணிய மீன் அல்லது கருவாடு சேகரித்து வைத்தல்.
(ஆ) மொத்த அல்லது சில்லறை வியாபாரத்தின்பொருட்டு அழுகிக் கெடும் உணவுப் பொருட்கள் சேகரித்து வைத்தல்.
(இ) உரம் செய்தல்.
(ஈ) சவர்க்காரம் செய்தல்.
(உ) சுருட்டுச் சுற்றுதல்.
(ஊ) பலகை பாடம்பண்ணல்.
(எ) கள் சேர்க்கும் நிலையம் வைத்தல்.
(ஏ) தும்பு செய்தல் அல்லது சேகரித்து வைத்தல்.
(ஐ) மூன்று மூடைகளுக்கு அதிகமாக தோல், எலும்பு அல்லது செயற்கை உரம் சேகரித்து வைத்தல்.
(ஒ) புகையிலை சேகரித்து வைத்தல்.

(2) கீழ்க்காணும் வியாபாரங்கள் அபாயமான வியாபாரங்களாகக் கருதப்படும் :—

(அ) குழி வெட்டி முதிரைக் கல் தோண்டுதல்.
(ஆ) நெல் குற்றும் ஆலை வைத்தல்.
(இ) வைக்கோல் சேகரித்து வைத்தல்.
(ஈ) காற்றடைத்த பானங்கள் செய்தல்.
(உ) புகையிலை பாடம் பண்ணலும் உலர்த்தலும்.
(ஊ) மண்ணெண்ணெய்க் கடை வைத்தல்.
(எ) ஆபரணங்கள் செய்தல்.
(ஐ) இயந்திரத்தினுல் தேங்காய் எண்ணெய் அல்லது நல்லெண்ணெய் வடித்தல்.
(ஒ) செக்கினுல்த் தேங்காய் எண்ணெய் அல்லது நல்லெண்ணெய் வடித்தல்.
(ஓ) எண்ணெயினுல் அல்லது வேறு எரிபொருளினுல் அல்லது நீராவியினுல் அல்லது மின் சக்தியினுல் இயங்கும் இயந்திரம் பாவிக்கப்படும் வியாபாரம் எதுவும்.
(ஔ) " கபூக் " கல், சரளைக்கல் அல்லது கருங்கல் தோண்டுதல்.
(க) சுண்ணும்பு சுடுதல்.
(ங) மூன்று மூடைகளுக்கு அதிகமாக சுண்ணும்பு சேகரித்துவைத்தல்.
(ச) துவிச்சக்கர வண்டிகள் செப்பனிடும் தொழிற்சாலை வைத்தல்.
(ஞ) மரம் அரி குழி வைத்தல்—
    (1) இயந்திரம் உபயோகிக்கப்படுவது.
    (2) இயந்திரம் உபயோகிக்கப்படாதது.
(ட) கொல்லுலை வைத்தல்.
(ண) தச்சுத் தொழிற்சாலை வைத்தல்.

(3) கீழ்க்காணும் வியாபாரங்கள் தீங்கான, அபாயமான வியாபாரங்களாகக் கருதப்படும் :—

(அ) மின் குளங்களில் மின்சக்தி நிரப்புதல்.
(ஆ) கோடா காய்ச்சுதல்.

**சாணமும் குழையும் சேர்த்தலும் விற்றலும்**

3. தலைவரால் அதன்பொருட்டு வழங்கப்பட்ட ஒரு லைசென்சின் பேரிலன்றி, கிராமச் சங்கத்துக்கு உரித்தாக்கப்பட்ட அல்லது அதன் ஆதிக்கத்திலுள்ள எக்காணியிலிருந்தும் எவரும் சாணம் அல்லது குழை சேர்த்தலாகாது.

4. (1) 3 ம் உபவிதியின்கீழ் வழங்கும் லைசென்ஸ் ஒவ்வொன்றும் இதன் அட்டவணையில் காட்டியிருக்கும் " A " பத்திரத்தைப் போன்றிருத்தல் வேண்டும். அதில் சொல்லப்படும் கால அளவுக்கு அது செல்லக்கூடியதாயிருக்கும்.

(2) 1 ம் உபவிதியின்கீழ் வழங்கிய லைசென்ஸ் ஒன்றை வைத்திருக்கும் எவரும் அதில் சொல்லப்படும் கால அளவு கழிந்தபின்னர் அந்த லைசென்சைக்கொண்டு சாணம் அல்லது குழை சேர்க்கலாகாது.

(3) 1 ம் உபவிதியின்கீழ் வழங்கிய லைசென்ஸ் ஒன்றை வைத்திருக்கும் எவரும் அந்த லைசென்ஸில் சொல்லப்படாத காணிகளிலிருந்து சாணம் அல்லது குழை சேர்க்கலாகாது.

5. 3 ம் உபவிதியின்கீழ் வழங்கிய லைசென்ஸ் ஒன்றை வைத்திருக்கும் எவரும், அவர் எக்காணிகளிலிருந்து சாணம் அல்லது குழை சேர்க்க அனுமதிக்கப்பட்டாரோ, அக்காணிகளுக்கு சேதம் எதுவும் உண்டுபண்ணக் கூடாது.

6. 5 ம் உபவிதியை மீறியமை எதற்கும் 3 ம் உபவிதியின்கீழ் வழங்கிய லைசென்ஸ் எதையும் தலைவர் அழித்தால் நீதியாகும்.

7. 4 (2) ம் அல்லது 5 ம் உபவிதியை மீறியமைக்கு லைசென்ஸ் காரர் இரண்டாவது தடவையாக அல்லது அதற்குப் பின்னுல் குற்றவாளியாகக் காணப்படுங்கால், கிராமக்கோடு, அது விதிக்கும் வேறு எதும் தண்டனையோடு, 3 ம் உபவிதியின்கீழ் வழங்கப்பட்ட லைசென்ஸ் எதையும் அழித்தல் நீதியாகும்.

8. தலைவரால் அதன் பொருட்டு வழங்கப்பட்ட ஒரு லைசென்ஸ் வைத்திருப்பவராக இருந்தாலன்றி, எவரும், கிராமப் பகுதிக்குள் ளிருக்கும் எந்த இடத்திலிருந்தும் கிராமப் பகுதிக்கு வெளியேயுள்ள எந்த இடத்துக்கும் சாணம் அல்லது குழை எதையும் அகற்றலாகாது.

9. 8 ம் உபவிதியின்கீழ் வழங்கும் லைசென்ஸ் ஒவ்வொன்றும்—

(1) இதன் அட்டவணையில் காட்டியிருக்கும் "B" பத்திரத்தைப் போன்றிருத்தல் வேண்டும் ;

(2) அகற்றப்படவிருக்கும் சாணத்தின் அல்லது குழையின் அளவைக் காட்டவேண்டும்.

(3) கிராமப் பகுதியிலிருந்து சாணம் அல்லது குழை அகற்றப்பட்டதும் காலாவதியாகவேண்டும்.

10. 8 ம் உபவிதியின்கீழ் ஒரு லைசென்ஸ் பெற்றுள்ள எவரும் அந்த லைசென்சில் சொல்லப்பட்டிருப்பதற்கு அதிகமான சாணத்தை அல்லது குழையை கிராமப் பகுதியிலிருந்து அகற்றக்கூடாது.

11. எதும் வண்டியிலுள்ள சாணம் அல்லது குழை சம்பந்தமான லைசென்ஸ் முந்தியே தலைவரிடம் ஒப்புவிக்கப்பட்டிருந்தாலன்றி, எவரும், சாணம் அல்லது குழை கொண்ட அந்த வண்டியை கிராமப் பகுதிக்கு வெளியே கொண்டு போகக்கூடாது.

12. சாணத்தை அல்லது குழையை அகற்றுதல் பற்றிய இந்த உபவிதிகளை மீறியமை எதற்கும் லைசென்ஸ்காரர் இரண்டாவது தடவையாக அல்லது அதற்குப் பிறகு குற்றவாளியாகக் காணப்படுங்கால், கிராமக் கோடு, அதி விதிக்கும் வேறு எதும் தண்டனையோடு, 8 ம் உபவிதியின்கீழ் வழங்கிய லைசென்ஸ் எதையும் அழித்தல் நீதியாகும்.

13. கிராமக் கோட்டால் முந்திய லைசென்ஸ் அழிக்கப்பட்டுள்ள எவருக்கும் சாணத்தை அல்லது குழையை அகற்றுதற்கான ஒரு லைசென்ஸ் வழங்கத் தலைவர் மறுத்தல் நீதியாகும்.

14. இந்த உபவிதிகளில் :—

"தலைவர் என்பது சங்கத் தலைவர் எனப் பொருள்படும் ;
"சங்கம்" என்பது வட்டுக்கோட்டை கிராமப் பகுதியின் கிராமச் சங்கம் எனப் பொருள்படும் ;
"சாணம்" என்பது மாடுகள், குதிரைகள், செம்மறியாடுகள், வெள்ளாடுகள் ஆகியவற்றின் சாணம் எனப் பொருள்படும் ;
"குழை" என்பது பசளையிடுதற்குப் பாவிக்கும் சகலமான மர இலைகளும் எனப் பொருள்படும் ;
"கிராமப் பகுதி" என்பது வட்டுக்கோட்டை கிராமப் பகுதி எனப் பொருள்படும்.

"A" பத்திரம்

உபவிதி 3.—சாணம்–குழை சேர்ப்பதற்கு லைசென்ஸ்

........19.... முதல் ............ 19 .... வரை கீழே சொல்லப்பட்டிருக்கும் காணிகளிலிருந்து சாணம்–குழை சேர்ப்பதற்கு .................... என்பவர் இத்தால் லைசென்ஸ் வழங்கப் படுகிறார்.

(காணிகள்)

........
தலைவர்,
கிராமச் சங்கம், வட்டுக்கோட்டை.

திகதி : .................. 19.....

"B" பத்திரம்

உபவிதி 8. சாணம்/அகற்றுதற்கு லைசென்ஸ்

............ என்னுமிடத்தைச் சேர்ந்த ............ என்பவர் ........... என்னுமிடத்திலிருந்து ............ வண்டி/லொறி சாணத்தை/குழையை அகற்றுதற்கு இத்தால் லைசென்ஸ் வழங்கப்படுகிறார். கிராமப் பகுதியிலிருந்த சாணத்தை/குழையை அகற்றுதற்கு முன்னர் இந்த லைசென்ஸ் தலைவரிடம் ஒப்புவிக்கப்படுதல் வேண்டும்.

..................
தலைவர்,
கிராமச் சங்கம், வட்டுக்கோட்டை.

திகதி : .................... 19.....

## கிராம சமுதாயச் சட்டம்

கிராம சமுதாயச் சட்டத்தின் (அத்தியாயம் 198) 49 ம் பிரிவின்படி மட்டக்களப்பு மாவட்டத்து அக்கரைப்பற்று மத்திய கிராமப் பகுதியின் கிராமச் சங்கத்தால் ஆக்கப்பட்டதும், 1947 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 24 ந திகதி வெளியான 9,773 ம் இலக்க விசேஷ "கெசெற்" றில் பிரசுரிக்கப்பட்ட பிரகடனத்தால் திருத்தப்பட்ட அப்பிரிவு தம்மீது வைத்த தத்துவங்களின் பலத்தைக்கொண்டு உள்ளூராட்சி கலாசார, விவகார அமைச்சர் அங்கீகரித்ததுமான உபவிதிகள்.

வீ. சீ. ஜயசூரியா,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி, கலாசார விவகார அமைச்சு.

கொழும்பு,
1959 ம் ஆண்டு மேமீ 7 ந உ.

### வாகன, மிருக வரி பற்றிய உபவிதிகள்

1. (1) சட்டத்தின் 47 ம் பிரிவின்படி திரட்டப்படும் வாகன, மிருக வரியின் பொருட்டு, அந்த வரிக்குப் பாத்திரமான வாகனம் அல்லது மிருகம் எதையும் தமது சொந்தத்தில் பாதுகாப்பில் அல்லது ஆதிக்கத்தில் வைத்திருக்கும் ஒவ்வொருவரும் இதன் "அ" அட்டவணையில் காட்டப்பட்டுள்ளதும் சங்கக் கந்தோரில் பெற்றுக்கொள்ளக்கூடியதுமான பத்திரத்தின் மாதிரியில் ஒரு விபர அட்டவணையை தலைவரிடம் கொடுக்க வேண்டும்.

(2) சட்டத்தின் 47 ம் பிரிவின்படி வரி செலுத்தப் பாத்திரப்பட்டவர்கள், 1959 ம் ஆண்டின்பொருட்டு, (1) ம் பந்தியில் சொல்லப்பட்ட அட்டவணையை எழுதி நிரப்பி 1959 ம் ஆண்டு மே மாதம் 31ந திகதிக்கு முன்னர் தலைவருக்கு அனுப்பவேண்டும். அவர் அந்த வாகனத்தை அல்லது மிருகத்தை தமது சொந்தத்தில், பாதுகாப்பில் அல்லது ஆதிக்கத்தில் வைத்திருக்கும், இனிவரும் எந்த வருடத்துக்கும் அத்தகைய அட்டவணை தரும்படி கேட்கப்படமாட்டார்.

2. சட்டத்தின் 47 (2) ம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய 1 ம் உபவிதியில் சொல்லப்படும் அட்டவணை கொடுத்த ஒவ்வொருவரும், வேறு அறிவித்தலின்றி—

(அ) 1959 ம் ஆண்டுக்கு அந்த அட்டவணையில் சொல்லப்படும் வாகனங்களுக்கு அல்லது மிருகங்களுக்கு அவ்வருடத்து ஜுலை மாதம் முப்பத்தொராந் திகதிக்கு முன்னர் வரி கொடுக்கவும் ;

(ஆ) இனிவரும் ஒவ்வொரு வருடத்துக்கும் அந்த அட்டவணையில் சொல்லப்படும் வாகனங்கள், மிருகங்களில் இனிவரும் அந்த வருடத்தில் முப்பது நாட்களுக்கு மேல், தமது சொந்தத்தில், பாதுகாப்பில் அல்லது ஆதிக்கத்தில் இருப்பனவற்றுக்கு அவ்வருடம் மார்ச் மாதம் முப்பத்தோராந் திகதிக்கு முன்னர்வரி கொடுக்கவும் பாத்திரராவார்.

3. எவரேனும் 1 ம் உபவிதியில் சொல்லப்படும் அட்டவணையைக் கொடுத்த பின்னர், அந்த அட்டவணையில் சொல்லப்படாததும் சட்டப்படி வரிக்குப் பாத்திரமானதுமான வாகனம் அல்லது மிருகம் எதையும் வாங்கினுல், வைத்திருந்தால் அல்லது உபயோகித்தால் அல்லது 1 ம் உபவிதின்படி அட்டவணை எதுவும் கொடுக்காத எவரும் முதல் முறையாக அவ்வரிக்குப் பாத்திரமான வாகனம் அல்லது மிருகம் எதையும் வாங்கினுல், வைத்திருந்தால் அல்லது உபயோகித்தால், அந்த வாகத்னதை அல்லது மிருகத்தை அவர் வாங்கிய அல்லது வைத்திருக்கவேனும் உபயோகிக்கவேனும் தொடங்கிய திகதியிலிருந்து ஒரு மாதத்துக்குள் அவ்விதம் வாங்கியதை, வைத்திருப்பதை அல்லது உபயோகிப்பதைக் குறித்து தலைவருக்கு எழுத்துமூலமான ஒரு அறிவித்தல் அனுப்பி இதன் "அ" அட்டவணையில் காட்டப்பட்டுள்ள பத்திரத்தின் மாதிரியில் எழுத்துமூலமான விபர அறிக்கை ஒன்றையும் கொடுக்கவேண்டும்.

4. சட்டத்தின் 47 (2) ம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, 3 ம் உபவிதியில் சொல்லப்படும் எழுத்துமூலமான அறிக்கை கொடுக்கும் ஒவ்வொருவரும் அந்த அறிக்கை எந்த வருடத்தில் கொடுக்கப்படுகின்றதோ அந்த வருடத்துக்கும் அதற்குப் பின்வரும் ஒவ்வொரு வருடத்துக்கும் அந்த அறிக்கையில் காட்டப்பட்டுள்ள, அவருடைய சொந்தத்தில், பாதுகாப்பில் அல்லது ஆதிக்கத்தில் இருக்கும், வாகனங்களுக்கும் மிருகங்களுக்கும் தலைவரால் அதன்பொருட்டு அவருக்கு அறிவிக்கப்படும் காலத்துக்குள் வரிகொடுக்கப்பாத்திரராவார்.

5. (1) 1 ம் உபவிதியில் சொல்லப்படும் அட்டவணையை அல்லது 3 ம் உபவிதியில் சொல்லப்படும் எழுத்துமூலமான அறிக்கையைக் கொடுத்த பின்னர், அந்த அட்டவணையில் அல்லது அறிக்கையில் பதிந்துள்ள அல்லது சொல்லப்பட்டுள்ள வாகனம் அல்லது மிருகம் எதற்கும் வரிகொடுக்கும் பாத்தியதையிலிருந்து தவிர்த்துவிடும்படி சட்டத்தின் 47 (3) ம் பிரிவின்படி கோரும் ஒவ்வொருவரும் அவ்விதம் கோருதற்கான காரணங்களைக்காட்டி தவிர்த்து விடுதற்கான தமது கோரிக்கை பற்றித் தலைவருக்கு உடனே எழுத்தில் அறிவித்தல் கொடுக்கவேண்டும்.

(2) 1 ம் உபவிதியில் சொல்லப்படும் அட்டவணையை அல்லது 3 ம் உபவிதியில் சொல்லப்படும் எழுத்துமூலமான அறிக்கையைக் கொடுத்த பின்னர் எந்த வாகனத்தையேனும் அல்லது மிருகத்தையேனும்

ஆட்சிபண்ணுமல் வைத்திருக்காமல் அல்லது உபயோகிக்காமல் விடும் ஒவ்வொருவரும், அந்த வாகனத்தை அல்லது மிருகத்தை தாம் ஆட்சி பண்ணுமல், வைத்திருக்காமல் அல்லது உபயோகிக்காமல் விட்டுவிட்டதாக உடனே தலைவருக்கு எழுத்தில் அறிவிக்கவேண்டும்.

6. எவரேனும் வரி கொடுத்ததும் வரி கொடுக்கப்பட்ட ஒவ்வொரு வாகனத்துக்கும் இதன் "ஆ" அட்டவணையில் காட்டியுள்ள வாகனங்களைப் பேதப்படுத்திக் காட்டும் எழுத்துகளில் அந்த வாகனத்துக்கேற்ற எழுத்துக்களையும் அது எந்த வருடத்துக்கு வழங்கப்படுகின்றதோ அந்த வருடத்தைக் குறிக்கும் இலக்கங்களையும் வாகனங்களின் பதிவு இடாப்பிலுள்ள அந்த வாகனத்தின் இலக்கத்தையும் கொண்ட உலோகத் தகடு ஒன்றை தலைவர் கொடுக்கவேண்டும். தகடு எதுவும் பாவிப்பினுல் அல்லது வேறு வகையில் தெளிவாகத் தெரியாதுபோனுல் அல்லது உருவழிந்து போனுல் அதன் சொந்தக்காரர் தலைவரிடம் அதைத் திருப்பிக் கொடுத்து ஐம்பது சதமும் செலுத்தினுல் புதிதாக ஒன்றைப் பெறும் உரித்துள்ளவராவர். வழங்கப்பட்ட தகடு எதுவும் காணுமற் போய்விட்டது அல்லது களவுபோய்விட்டது என்று சத்தியக் கடுதாசி மூலமாகவேனும் அல்லது வேறு விதத்திலேனும் தலைவர் நம்புவாராயின் அவர் அதன் சொந்தக்காரர் அறுபது சதம் செலுத்தி விண்ணப்பிக்குங்கால் அவருக்கு ஒரு புதிய தகட்டைக் கொடுக்கலாம்.

7. ஒவ்வொரு வாகனத்தினதும் சொந்தக்காரர் அல்லது பொறுப்பாளி அந்த வாகனத்துக்குக் கொடுக்கப்பட்ட தகட்டை அந்த வாகனத்தின் துலக்கமான ஒரு பாகத்தில் மாட்டிவைக்கவேண்டும்.

8. ஏதேனும் தெரு அல்லது பாதை வழியாகச் சென்றுகொண்டிருக்கும் எந்த வாகனத்தையும் அந்த வாகனத்தில் மாட்டிவைக்க வேண்டுமென்று 7 ம் உபவிதியால் வேண்டப்படும் உலோகத் தகட்டைப் பார்வையிடுதற்பொருட்டு தலைவரேனும் அல்லது பொலிசு உத்தியோகத்தர் எவரேனும் அல்லது தலைவரால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் எவரேனும் நிறுத்துவதும் தடுத்து வைப்பதும் நீதியாகும். அந்த வாகனத்தின் சாரதி அல்லது பொறுப்பாளி தலைவராலாவது அல்லது அத்தகைய வேறு உத்தியோகத்தராலாவது கேட்டுக் கொள்ளப்படுங்கால் அந்த வாகனத்தை நிறுத்தி தலைவரை அல்லது அத்தகைய வேறு உத்தியோகத்தரை அத்தகட்டைப் பார்வையிட அனுமதிக்கவேண்டும்.

9. இந்த உபவிதிகளில்—

"தலைவர்" என்பது சங்கத் தலைவர் எனப் பொருள்படும் ;

"சங்கம்" என்பது மட்டக்களப்பு மாவட்டத்து அக்கரைப்பற்று மத்திய கிராமப் பகுதியின் கிராமச் சங்கம் எனப் பொருள்படும் ;

"சட்டம்" என்பது கிராம சமுதாயச் சட்டம் (அத்தியாயம் 198) எனப் பொருள்படும்.

"அ" அட்டவணை

பத்திரம்

இலக்கம் : ....................

வட்டார இலக்கம் : ..............

அக்கரைப்பற்று மத்திய கிராமப் பகுதியின் கிராமச் சங்கம். வாகன மிருகவரிபற்றிய உபவிதிகளின் தாற்பரியப்படி கொடுக்கவேண்டிய வாகனங்களின் அல்லது மிருகங்களின் அல்லது வாகனங்களினதும் மிருகங்களினதும் விபர அறிக்கை.

சொந்தக்காரர் பெயர் : .............

கிராமம் : .............

| வாகனங்களின் அல்லது மிருகங்களின் அல்லது வாகனங்களினதும் மிருகங்களினதும் விபரங்கள் | எண்ணிக்கை (சொல்லில்) | குறிப்புகள் (துவிச்சக்கர வண்டிகளாயின் உற்பத்தியாளரின் இலக்கம் தருக) |
|---|---|---|
| பாரவண்டிகள், பிரயாண வண்டிகள் அல்லது றிக்ஷோக்கள் தவிர்ந்த சகல இனவண்டிகளும் .. | .......... | ............ |
| இரட்டை மாட்டுப் பாரவண்டிகள் அல்லது பிரயாண வண்டிகள் அல்லது ஒற்றை மாட்டுப் பாரவண்டிகள் அல்லது பிரயாண வண்டிகள் .. | .. .......... | ............ |
| றிக்ஷோக்கள் .. | .. .......... | ............ |
| கை வண்டிகள் .. | .. .......... | ............ |
| துவிச்சக்கர வண்டிகள் | .. .......... | ............ |
| யானைகள் .. | .. .......... | ............ |
| குதிரைகள் .. | .. .......... | ............ |
| கோவேறு கழுதைகள் | .. .......... | ............ |
| கழுதைகள் .. | .. .......... | ............ |

நானறிந்தவரையில் மேற்படி விபரங்கள் உண்மையானவையென்று நான் உறுதிப்படுத்துகிறேன்.

திகதி : .....................

........................
சொந்தக்காரரின் பெயர்.

"ஆ" அட்டவணை

| | |
|---|---|
| பாரவண்டி, பிரயாணவண்டி அல்லது றிக்ஷோ தவிர்ந்த சகல இன வண்டி ஒவ்வொன்றுக்கும் .. | அ. ப. ம. கி. ச. பொ. வ. |
| இரட்டைமாட்டுப் பாரவண்டி அல்லது பிரயாணவண்டி ஒவ்வொன்றுக்கும் | அ. ப. ம. கி. ச. இ. மா. வ. |
| ஒற்றைமாட்டுப் பாரவண்டி அல்லது பிரயாணவண்டி ஒவ்வொன்றுக்கும் .. | அ. ப. ம. கி. ச. ஒ. மா. வ. |
| றிக்ஷோ ஒவ்வொன்றுக்கும் .. | அ. ப. ம. கி. ச. றி. வ. |
| கைவண்டி ஒவ்வொன்றுக்கும் .. | அ. ப. ம. கி. ச. கை. வ. |
| துவிச்சக்கர வண்டி ஒவ்வொன்றுக்கும் | அ. ப. ம. கி. ச. து. வ. |

---

## கிராம சமுதாயச் சட்டம்

கிராம சமுதாயச் சட்டத்தின் (அத்தியாயம் 198) 49 ம் பிரிவின்படி மட்டக்களப்பு மாவட்டத்து அக்கரைப்பற்று மத்திய கிராமப் பகுதியின் கிராமச் சங்கத்தால் ஆக்கப்பட்டதும், 1947 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 24 ந் திகதி வெளியான 9,773 ம் இலக்க விசேஷ "கெசெற்"றில் பிரசுரிக்கப்பட்ட பிரகடனத்தால் திருத்தப்பட்ட அப்பிரிவு தம்மீது வைத்த தத்துவங்களின் பலத்தைக்கொண்டு உள்ளூராட்சி, கலாசார விவகார அமைச்சர் அங்கீகரித்ததுமான உபவிதிகள்.

வீ. சீ. ஜயசூரிய,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி, கலாசார விவகார அமைச்சு.

கொழும்பு,
1959 ம் ஆடு மே மீ 12 ந உ.

### உபவிதிகள்

### அபாயமான, தீங்கான வியாபாரங்கள்

1. 1955 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 11 ந் திகதி வெளியான 10,765 ம் இலக்க "கெசெற்"றில் பிரசுரிக்கப்பட்ட அபாயமான, தீங்கான வியாபாரங்கள் பற்றிய உபவிதி, இத்தால் பின்வருமாறு திருத்தப்படு படுகின்றது :—

(1) அதன் (1) ம் பந்தியில், "பாணி காய்ச்சுதல்" என்ற இனத்தை நேரடுத்துப்பின் கீழ்க்காணும் புதிய இனங்களை வைத்தும் :—

"கரி சேகரித்து வைத்தல்.

தகர வேலைக்காரரின் கடை வைத்தல்.

மட்பாண்டம் செய்தல்".

(2) அதன் (2) ம் பந்தியில், "வைக்கோல் சேகரித்து வைத்தல்" என்ற இனத்தை நேரடுத்துப்பின் கீழ்க்காணும் புதிய இனங்களை வைத்தும் :—

"விறகுக் கடை வைத்தல்.

இயந்திரத்தால் மிளகாய் அல்லது கறிச்சரக்குகள் அரைத்தல் மரம் அரிகுழி வைத்தல்.

தச்சுத் தொழிற்சாலை வைத்தல்.

மோட்டார் வாகனங்கள் செப்பனிடும் தாபனம் வைத்தல்.

துவிச்சக்கர வண்டிகள் செப்பனிடும் தாபனம் வைத்தல்".

### கட்டிடங்களும் எல்லைச் சுவர்களும் நிர்மானித்தல்

2. (1) எவரேனும், கிராமப் பகுதிக்குள், புதிய கட்டிடம், எல்லைச் சுவர் அல்லது வாயில் முகப்பு எதையும்—

(அ) கிராம வண்டித் தெரு எதனதும் மத்தியிலிருந்து பதினைந்தடி தூரத்துக்குள்ளேனும் ; அல்லது

(ஆ) காலக்கிரமத்தில் ஒரு கிராம வண்டித் தெருவாக மாற்றப்படவிருக்கும் ஒரு பாதையென்று சங்கத்தால் அறிவிக்கப்பட்டிருக்கும் கிராமப் பாதை எதனதும் மத்தியிலிருந்து பதினைந்தடி தூரத்துக்குள்ளேனும்,

நிர்மாணிக்கலாகாது.

(2) தலைவருக்கு, அதைப்பற்றி, எழுத்தில் முப்பதுநாள் அறிவித்தல் கொடுக்காமல், எவரேனும், (1) ம் பந்தியில் சொல்லப்படும் வண்டித் தெரு அல்லது பாதை எதனதும் ஓரமாகக் கட்டிடம், எல்லைச் சுவர் அல்லது வாயில் முகப்பு எதையும் நிர்மாணிக்கலாகாது.

**கொண்டுதிரிந்து விற்பவர்கள்**

3. (1) தலைவரால் அதன்பொருட்டு வழங்கப்படும் ஒரு லைசென்ஸ் இருந்தாலன்றி, எவரும், கொண்டு திரிந்து விற்பவர் ஒருவரின் தொழிலை ஆரம்பிக்கவோ அல்லது நடத்தவோ கூடாது.

(2) பந்தி (1) ன் படி வழங்கப்பட்ட லைசென்ஸ் ஒவ்வொன்றும், அது எந்த வருடத்துக்கு வழங்கப்பட்டதோ அந்த வருடத்து டிசம்பர் மாதம் முப்பத்தொராந் திகதி வலியற்று முடிவுறும்.

4. இந்த உபவிதிகளின்—

" தலைவர் " என்பது சங்கத் தலைவர் எனப் பொருள்படும் ;

" சங்கம் " என்பது கிராமப் பகுதியின் கிராமச் சங்கம் எனப் பொருள்படும் ;

" கிராமப் பகுதி " என்பது மட்டக்களப்பு மாவட்டத்து அக்கரைப்பற்று மத்திய கிராமப் பகுதி எனப் பெருள்படும்.

## விளம்பரம்

1959 ம் ஆண்டு ஆனி (ஜூன்) மாதம் தொடக்கம் இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படவேண்டிய சகல விளம்பரங்களும் அறிவித்தல்களும் திங்கட்கிழமை பி. ப. 4 மணிக்கு முன்னர் அரசாங்க அச்சகத்திற்கு வந்துசேரவேண்டுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது. திங்கட் கிழமைக்கும் வெள்ளிக்கிழமைக்கும் (இரு நாட்களும் உட்பட) இடையில் விடுமுறை ஏற்படின் முடிவு காலம் சனிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.

பேர்ணர்ட் த சில்வா,
அரசாங்க அச்சகத் தலைவர்.

அரசாங்க அச்சகம்,
கொழும்பு,
1959 ம் ஆண்டு வைகாசி (மே) மாதம் 15 ந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது